# தமிழ்நாடு அரசு

## வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

பிரிவு : TNPSC Group I தேர்வு

பாடம் : இந்திய அரசியலமைப்பு

பகுதி : **நெருக்கடி நிலை பிரகடனம்**

**காப்புரிமை**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் குரூப் - I முதல்நிலை மற்றும் முதன்மை தேர்வுகளுக்கான காணொலி காட்சி பதிவுகள், ஒலிப்பதிவு பாடக்குறிப்புகள், மாதிரி தேர்வு வினாத்தாள்கள் மற்றும் மென்பாடக்குறிப்புகள் ஆகியவை போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவ, மாணவிகளுக்கு உதவிடும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் மென்பொருள் வடிவில் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மென்பாடக் குறிப்புகளுக்கான காப்புரிமை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைச் சார்ந்தது என தெரிவிக்கப்படுகிறது.

எந்த ஒரு தனிநபரோ அல்லது தனியார் போட்டித் தேர்வு பயிற்சி மையமோ இம்மென்பாடக் குறிப்புகளை எந்த வகையிலும் மறுபிரதி எடுக்கவோ, மறு ஆக்கம் செய்திடவோ, விற்பனை செய்யும் முயற்சியிலோ ஈடுபடுதல் கூடாது. மீறினால் இந்திய காப்புரிமை சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட ஏதுவாகும் என தெரிவிக்கப்படுகிறது. இது முற்றிலும் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா சேவையாகும்.

**ஆணையர்,**
**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை**

# நெருக்கடி நிலை பிரகடனம்

## அவசரநிலை பிரகடனம்

**சுரத்து 352 - 360 :**

- இந்தியாவில் 3 வகையான நெருக்கடி நிலைகள் உள்ளன.
    1. தேசிய நெருக்கடி நிலை - சரத்து 352
    2. மாநில நெருக்கடி நிலை - சரத்து 356
    3. நிதி நெருக்கடி நிலை - சரத்து 360

### 1) தேசிய நெருக்கடி நிலை - சரத்து 352:

- போரினாலோ அல்லது வெளிநாட்டு ஆக்கிரமிப்பினாலோ அல்லது ஆயுத கிளர்ச்சியினாலோ இந்தியாவிற்கு நெருக்கடி நிலவுவதாக குடியரசு தலைவர் மனநிறைவு கொள்ளும்போது, இந்தியா முழுமைக்கோ அல்லது ஏதாவது ஒரு பகுதிக்கோ குடியரசுத் தலைவர் தேசிய நெருக்கடி நிலையை பிறப்பிக்கலாம். ஆனால் கேபினெட் அமைச்சரவை எழுத்து வடிவில் குடியரசுத் தலைவருக்கு பரிந்துரைக்கவேண்டும்.
- ஆனால் இதற்கு பாராளுமன்றத்தில் ஒரு மாத காலத்திற்குள் ஒப்புதல் பெற வேண்டும். ஒப்புதல் பெறப்பட்டால் அடுத்த 6 **மாதத்திற்கு** தொடர்ந்து செயலில் இருக்கும்.

இதுவரை 3 முறை நெருக்கடிநிலை பிரகடனங்கள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

1. சீனப்போர் (1962-1968)
2. பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு (1971)
3. உள்நாட்டு அமைதிக்குலைவு காரணமாக (1975-1977)

**நெருக்கடிநிலை பிரகடனத்தால் ஏற்படும் விளைவுகள்**

1. நெருக்கடி நிலை செயல்பாட்டில் இருக்கும்போது, மாநிலங்களுக்குக் கட்டளையிடுவதற்கு யூனியனின் நிர்வாகத்திற்கு அதிகாரம் உண்டு.
2. நெருக்கடி நிலைப் பிரகடனம் செயல்பாட்டில் இருக்கும்போது, மாநிலப்பட்டியலில் குறிப்பிடப்பட்டிருக்கும் எந்தப் பொருள் குறித்தும் நாடாளுமன்றம் சட்டம் இயற்றலாம்.
3. **சரத்து 19ன்** கீழ் உத்தரவாதம் வழங்கப்பட்ட அடிப்படை உரிமைகளை நிறுத்தி வைக்கலாம். நெருக்கடி நிலையின்போது மக்களவையின் ஆயுள் காலத்தை ஓராண்டுக்குக் குடியரசுத் தலைவரால் நீட்டிக்கப் -படலாம்.

4. நெருக்கடி நிலைப் பிரகடனத்தின் -போது, **சரத்து 20 மற்றும் 21களில்** குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படை உரிமைகள் தவிர மற்ற குடியரசுத்தலைவரால் நிறுத்தி வைக்கப்பட்டுவிடும்.

## மாநில நெருக்கடி நிலை:

- சரத்து 356ன்படி மாநிலங்களில் அரசமைப்பு இயந்திரம் சரியாக செயல்படவில்லை என்று ஆளுநரிடமிருந்து ஒரு அறிக்கையை குடியரசுத்தலைவர் பெறும்போது, அல்லது குடியரசுத்தலைவர் மனநிறைவு கொள்ளும்போது மாநிலத்தில் நெருக்கடி நிலையை பிறப்பிக்கலாம்.
- சரத்து 356ன்படி சரத்து 365ல் உள்ளபடி ஒரு மத்திய அரசின் வழிகாட்டுதலை ஒரு மாநில அரசு பின்பற்றாத போதும் நெருக்கடி நிலையை குடியரசுத் தலைவர் பிறப்பிக்கலாம். ஆனால் இந்தப் பிரகடனம் நாடாளுமன்றத்தின் இரு அவைகளாலும் இரண்டு மாதங்களுக்குள் ஏற்கப்பட வேண்டும். அவ்வாறு ஏற்கப்பட்டால் **6 மாதங்களுக்கு செயலில்** இருக்கும். பாராளுமன்றத்தின் ஒப்புதல்படி அடுத்தடுத்து நீடிக்கப்படுவதன் வாயிலாக 3 ஆண்டுகளுக்கு செயலில் இருக்கச் செய்யலாம்.
- **1951ம் ஆண்டில் பஞ்சாப்** மாநிலத்தில் இப்பிரகடனம் அமல்படுத்தத் தொடங்கி இதுவரை நூற்றுக்கணக் -கான முறை இந்தியாவில் பயன் -படுத்தப்பட்டுள்ளது. அதிகமான முறை பயன்படுத்தப்பட்டுள்ளது.

## நிதி நெருக்கடி நிலை:

- சரத்து 360ன்படி இந்தியாவிலோ அல்லது அதன் ஏதாவது ஒரு பகுதியிலோ நிதி நிலை நிலைப்புத் தன்மை அல்லது பொருளிருப்பு அச்சுறுத்தப்பட்டிருப்பதான சூழ்நிலை எழுந்துள்ளதாக குடியரசுத் தலைவர் மனநிறைவு கொள்ளும்போது இப்பிரகடனத்தை பிறப்பிக்கலாம். அவ்வாறு பிறப்பிக்கப்பட்டால் பாராளுமன்றத்தின் இரு அவை களிலும் **2 மாத காலத்திற்குள்** ஏற்கப்படவேண்டும். இந்தியாவில் இப்பிரகடனம் இதுவரை பயன்படுத்தப்படவில்லை.